# மட்டக்களப்பில் இந்துக் கல்விப் பாரம்பரியம் - ஓர் ஆய்வு

**நா.வாமன்**

விரிவுரையாளர், இந்துநாகரிகத் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப்பல்கலைக் கழகம்.
vamannagaiah@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**
இக்கட்டுரை கிழக்கின் முக்கியமான மாவட்டங்களுள் ஒன்றான மட்டக்களப்பில் இந்துக் கல்விப் பாரம்பரியம் பற்றி ஆராய்கின்றது. அதன்படி இவ்வாய்வானது இந்துக் கல்வி முறையின் வரலாற்று வளர்ச்சி முறையைக் கவனத்தில் கொள்வதுடன் காலனித்துவ கால மற்றும் நவீன கால இந்துக் கல்வி முறையையும் ஆராய்கின்றது. முதலாம் நிலை, இரண்டாம் நிலைத் தரவுகளைப் பயன்படுத்தி விபரணப் பகுப்பாய்வு முறையின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**Keywords**: இந்துக் கல்விப் பாரம்பரியம்இ கல்வி வளர்ச்சி

**அறிமுகம்**

இலங்கையின் இந்துப்பண்பாட்டு வரலாற்றில் கிழக்கிலங்கைப் பகுதியான மட்டக்களப்பிற்குத் தனி இடம் உண்டு. இந்துப் பண்பாட்டின் பரிமாணங்களுள் ஒன்றாக விளங்குவது இந்துக் கல்வி. மட்டக்களப்பைப் பொறுத்தவரையில் இங்கு வாழ்ந்த மக்களின் பாரம்பரிய கல்வி முறையாக திண்ணைக்கல்வி அமைந்திருந்தது. இந்து சமயம், அறம் சார்ந்த அடிப்படை விடயங்களே இக்கல்வி முறையிற் போதிக்கப்பட்டுள்ளன. அக்காலத்திற் பாடப்பட்ட ‘‘எண்ணெயச்சிந்து’’ இக்கல்வி முறை பற்றி அறிந்து கொள்வதற்கான முக்கிய சான்றாகத் திகழ்கின்றது. இவற்றை விட மட்டக்களப்பில் வழக்கிலிருந்த நாட்டார் கலைகளிலும் இத்தகைய சமயம் சார்ந்த விடயங்கள் மக்களுக்கு போதிக்கப்பட்டுள்ளன. இவற்றை செவியேறற் கல்வி என்பர். கூத்து, கும்மிப் பாடல்கள்,ஊஞ்சற் பாடல்கள், அம்மானைப் பாடல்கள், கோலாட்டப் பாடல்கள் என்பன இவற்றில் குறிப்பிடத்தக்கனவாகும். இவற்றில் இந்து சமயம் சார்ந்த புராண, இதிகாசக் கதைகளே பெரும்பாலும் பாடப்படும்.

ஆங்கிலேயராட்சியில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் சுதந்திரம் இழந்தன. ஆட்சியாளர்களே இப்பள்ளிக்கூடங்களை நடத்தும் நிலை இருந்தது. 1814 ஆம் ஆண்டிலிருந்து மெதடிஸ்த திருச்சபைப் பாடசாலைகளும் 1854 ஆம் ஆண்டிலிருந்து கத்தோலிக்க திருச்சபைப் பாடசாலைகளும் மட்டக்களப்பு மாநிலம் எங்கும் தோன்றத் தொடங்கின. இப்பாடசாலையிற் கல்வி பயில்வதாயின் இந்துக்கள் கிறிஸ்தவ சமயத்திற்கு மதம் மாற வேண்டும் என்ற சூழ்நிலை உருவானது.

கிறிஸ்தவ பாதிரிமார்களது இக்கொள்கை இந்துக்கள் மத்தியில் சமய வெறுப்புணர்ச்சியை உண்டுபண்ணியது. இதனால் சுதேச உணர்வு கொண்டு இளைஞர்கள் எழுச்சியுறும் நிலை தோன்றிற்று. சைவப்பிள்ளைகள் கல்வி கற்பதற்கென்று சைவப்பாடசாலைகள் கிராமங்கள் தோறும் அமைக்கப்படலாயின. இக்காலப்பகுதியிலே சுவாமி விவேகானந்தர் இலங்கையின் பல இடங்களிலும் நிகழ்த்திய சமயச் சொற்பொழிவுகளும் இப்பிரதேச மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தியது. இதன் பலனாக விவேகாநந்த சபை உருவாக்கப்பட்டு அதன் பரிபாலனத்தின் கீழும் பல சைவப்பாடசாலைகள் தோற்றம் பெற்றன.

தொடர்ந்து சுவாமி விபுலானந்தரின் முயற்சியால் இராமகிருஸ்ண மிஷன் மூலம் பல பாடசாலைகள் உருலாக்கப்பட்டன. இலங்கை அரசாங்கம் 1960 டிசம்பரில் பாடசாலைகளை பொறுப்பேற்கும் வரை பல இந்துப் பாடசாலைகள் அமைக்கப்பட்டு கல்விப் போதனை இடம்பெற்றுள்ளது.

தவிர, இந்துச் சிறார்கள் கல்வி கற்பதற்காக ஞாயிறு வகுப்புக்களும் நடாத்தப்பட்டு வந்துள்ளன. இவ்வகுப்புக்கள் 1989 ஆம் ஆண்டு முதலாக இந்து சமய கலாசார திணைக்களத்தினால் அறநெறிப் பாடசாலைகளாக மாற்றப்பட்டு இன்றுவரை கல்விப் போதனை இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. தற்பொழுது கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இந்து சமயம் தொடர்பான கற்கைகள் இடம்பெறுகின்றமையும் இந்துக் கல்வி முறையின் வளர்ச்சியே.

இவ்வாறு புராதன காலம் தொடக்கம் தற்பொழுது வரை வளர்ச்சி பெற்றுள்ள மட்டக்களப்பின் இந்துக் கல்விப் பாரம்பரியமானது விரிவாக ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

**ஆய்வின் நோக்கம்**

- மட்டக்களப்பில் நிறுவனமயப்பட்ட அமைப்பாக பாடசாலைகள் தோற்றம் பெறுவதற்கு முன்னர் நிலவிய இந்துக்களின் புராதன கல்வி முறை பற்றி எடுத்துரைத்தல்.

- அந்நியர் ஆட்சியில் இந்துக் கல்விமுறை எதிர்நோக்கிய சவால்களையும் வெற்றிகொண்ட வழிமுறைகளையும் கண்டறிதல்.

- இன்றைய நவீன கல்வி முறையின் வளர்ச்சியில் இந்துக் கல்வி முறையின் வகிபங்கினை எடுத்துரைத்தல்.

**ஆய்வு முறையியல்**

மட்டக்களப்பின் இந்துக் கல்விப் பாரம்பரியம் பற்றி அறிய விளையும் இவ்வாய்வில் விபரண ஆய்வு, வரலாற்றியல் ஆய்வு, ஒப்பியல் ஆய்வு முறை என்பன பயன்படுத்தப்படுகின்றது.

**ஆய்வின் எல்லை**

- இவ் ஆய்விற்கு எடுத்துள்ள விடயத்திற்குரிய கால எல்லை திட்டவட்டமாகக் கூறமுடியாத காலம் தொடக்கம் தற்காலம் வரையான காலப்பகுதியாக அமைகிறது.

- இங்கு குறிப்பிடப்படும் மட்டக்களப்பு தேசம் என்பது 1961 ஆம் ஆண்டிற்கு முன்பு மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இரு மாவட்டங்களையும் இணைத்ததாகவே கருத்திற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வின் மூலங்கள்**

**முதல் நிலைத் தரவுகள்**

இவ்வாய்வின் முதல்நிலைத் தரவுகளாக வாய்மொழி மரபில் எழுந்த வாய்மொழிப் பாடல்கள்(எண்ணைச்சிந்து, ஊஞ்சல் பாடல், அம்மானைப் பாடல் முதலியன), இலக்கியங்கள் என்பன அமைகின்றன.

**இரண்டாம் நிலைத் தரவுகள்**

மட்டக்களப்பின் கல்வி முறை தொடர்பாக இதுவரை வெளிவந்த கட்டுரைகள், கள ஆய்வின் மூலமாகப் பெறப்படும் தகவல்கள் இரண்டாம் நிலைத் தரவுகளாக பயன்படுத்தப்படும்.

**ஆய்வின் பயன்**

மட்டக்களப்புப் பிராந்தியத்தில் மரபுவழியாக நிலைபெற்ற இந்துப் பண்பாட்டில் இந்துக் கல்வி முறையின் முக்கியத்துவத்தினை ஆதார பூர்வமான முறையில் தெளிவுபடுத்துவதன் மூலம் குறிப்பாக இப்பிராந்தியத்திலும் பொதுவாக இலங்கையிலும் இந்துக் கல்வி பற்றிய அறிவு விரிவாக்கம் பெறும். அத்துடன் இது நாடளாவிய ரீதியில் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பயன்படும். மேலும், மட்டக்களப்பு தவிர்ந்த ஏனைய பிராந்தியங்களில் இந்துக் கல்விமுறை தொடர்பாக ஆய்வு செய்ய முனைவோர்க்கு இவ்வாய்வு ஒரு முன்னோடியாக அமையும்.

## உசாத்துணை நூல்கள்

‘எண்ணெய்ச்சிந்து’, (1983), இந்துசமய விருத்திச் சங்கம், மட்டக்களப்பு.

சிவசுப்பிரமணியம், வ., (1993), ‘விபுலாநந்த தரிசனம்’, சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபை, மட்டக்களப்பு.

யோகராசா, செ., (கட்டுரையாசிரியர்), (2004), ‘வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக’, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

பெரியதம்பிப்பிள்ளை.ஏ., (1982), ‘உள்ளதும் நல்லதும்’, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணி மன்றம், மட்டக்களப்பு.

கந்தையா, வீ. சீ., (2002), ‘மட்டக்களப்புத் தமிழகம்’, எக்ஸில், பிரான்ஸ்.

மகேஸ்வரலிங்கம், க., (2008), ‘மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும்’, தமிழ்ச்சங்கம், கொழும்பு.

மணி, பெ. சு., (1997), ‘இலங்கையில் இராமகிருஷ்ணர் இயக்கம்’, இராமகிருஷ்ண மிஷன், கொழும்பு.

மௌனகுரு, சி., (பதிப்பாசிரியர்) ‘மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப்பண்பாடு’, (2003), இரண்டாம் உலக இந்துமாநாடு- மட்டக்களப்பு பிரதேசக் கிளை, மட்டக்களப்பு.